# செந்தூலில் அதிரடிச் சோதனை நடவடிக்கை:

# கள்ளக் குடியேறிகள் அரக்கப்பரக்க ஓடினர்

கோலாலம்பூர், மே 29-
கள்ளக்குடியேறிகளை களையெடுக்கும் வகையில் குடிநுழைவுத் துறை உட்பட பல்வேறு இலாகாக்களின் அமலாக்கப் பிரிவினர் நேற்று பின்னிரவில் செந்தூலில் மேற்கொள்ளப்பட்ட அதிரடிச் சோதனை நடவடிக்கையின்போது அங்கிருந்த கள்ளக் குடியேறிகள் அரக்கப் பரக்க ஓடினர்.

மேலும் சிலர் வீட்டு கூரைகளின் மேல் ஏறி அங்கிருந்து தப்பிக்கவும் முயற்சி செய்தனர்.

கடந்த நான்கு ஆண்டு களுக்கு மேலாக இந்நாட்டில் சட்டவிரோதமான முறையில் கள்ளக் குடியேறிகளை அடையாளம் காணும் வகையில் இந்த அதிரடிச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. நேற்று பின்னிரவு 12.30 மணி முதல் பின்னிரவு 2 மணி வரை டூத்தா - உலுகிளாங் நெடுஞ் சாலையின் அருகே இச் சோதனை மேற்கொள்ளப் பட்டது.

அப்போது அங்கிருந்த சுமார் 124 அந்நிய நாட்டவர்களிடம் சோதனை மேற்கொள்ளப் பட்டது.

மியன்மார், இந்தோனேசியா, இந்தியா நாடுகளைச் சேர்ந்த அந்நிய நாட்டவர்களிடம் இச் சோதனை மேற்கொள்ளப்பட் டதாக குடிநுழைவுத்துறையின்



தலைமை இயக்குநர் டத்தோ ருஸ்லின் ஜூசோ கூறினார். சட்டவிரோதமான முறையில் அங்கு தங்கியிருந்த அவர்கள் அனைவரும் மனைவி, கணவர்களுடன் குடும்பத்துடன் அங்கு வசித்து வந்ததாகவும் அவர் சொன்னார்.

மியன்மார் நாட்டைச் சேர்ந்த ரோஹிங்யா இனத்தவர்கள் அங்கு அதிகமாக இருந்து வந்ததாகவும் அவர் தெரிவித்தார். இச்சோதனை நடவடிக்கையில் குடிநுழைவுத்துறையின் துணைத் தலைமை இயக்குநர் ஜெப்ரி எம்போக் தஹாவும் கலந்து கொண்டார்.

பொது தற்காப்புப் படை, கோலாலம்பூர் மாநகர் மன்றம், தேசியப் பதிவு இலாகா, பொது நடவடிக்கை பிரிவினர் என சுமார் 229 அமலாக்கப் பிரிவினர் இச்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இச்சோதனை நடவடிக்கை யின்போது அந்த சட்ட விரோத குடியிருப்புப் பகுதியில் இருந்த ஐந்து மளிகைக் கடை களும் சோதனை செய்யப்பட்டன.

அப்போது அந்த கடைகளில் உதவித் தொகை பெற்ற பாக் கெட்டுகளில் அடைக்கப்பட்ட சமையல் எண்ணெய்களும் காணப்பட் டதாக அவர் சொன்னார்.

அந்த குடியிருப்புப் பகுதி குறித்து அவரிடம் கேட்டபோது, அரசாங்கத் திற்குச் சொந்தமான அந்த நிலத்தில் சுமார் 30 வீடுகள் கட்டப்பட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்தார். அங்கு குடியிருந்த அனைத்து அந்நிய நாட்டவர்களும் அந்த வீடுகளை அவர்கள் மலேசியர்களிடமிருந்து வாடகைக்கு பெற்றதாகவும் கூறப்படுகிறது என்றார்.

அந்த வீடுகளுக்கு மாதம் ஒன்றுக்கு 400 ரிங்கிட் வாடகை விதிக்கப்பட் டதாகவும் அவர் சொன்னார். அந்த வீடுகளில் கும்பலாக அதிகமானோர் தங்கி வந்துள்ளதாகவும் அவர் சொன்னார்.